# பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத்தலைமை/ தொலைபேசி / நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| I | <u>பிவ, மிபிவ, மற்றும்சீம இன மாணவர்களுக்கு கல்வி பயில பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள்</u> | | | | |
| 1 | விடுதியில் இலவச தங்கும் வசதி, இலவச உணவு வழங்கப்படுகிறது. மாணவ/மாணவிகளுக்கு இலவசமாக (10–ஆம் வகுப்பு வரை ) சீருடைகள் வழங்கப்படுகிறது. 10 மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வில் வெற்றி பெற சிறப்பு வழிகாட்டிகள் வழங்கப்படுகிறது.<br><br>பள்ளி விடுதிகள் 1078<br>(4–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை<br>கல்லூரி விடுதிகள்– 128<br>( கல்லூரி படிப்பு) -------<br>1206<br>------ | பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். | 1. பிவ, மிபிவ. சீம இனத்தை சார்ந்தவர் என்பதற்கான சான்று<br>2. வருமானச் சான்று | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர் | ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலம் , சேப்பாக்கம், சென்னை– 600 005.<br>தொலைபேசி<br>அ) 28511124<br>நி ) 28552642 |
| 2 | <u>அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் இல்ல மாணவர்களுக்கு உணவு மானியம் ஒரு மாணவருக்கு ரூ.200/– வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.</u> | பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். | 1. பிவ, மிபிவ. சீம இனத்தை சார்ந்தவர் என்பதற்கான சான்று<br>2. வருமானச் சான்று | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர் | ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலம் சேப்பாக்கம், சென்னை– 600 005.<br>தொலைபேசி<br>அ) 28511124<br>நி ) 28552642 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத்தலைமை/ தொலைபேசி / நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 3. | <u>கல்வி உதவித்தொகை</u><br><u>பள்ளிப்படிப்பு உதவித் தொகை</u><br>தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் சாதி, வருமான பாகுபாடின்றி அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் அனைவருக்கும் படிப்புக் கட்டணத்தொகை வசூலிக்கப்படுவதில்லை. 6ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு உத்தரவிட்டுள்ளது | – | – | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர் | ஆணையர்,<br>பிற்படுத்தப்பட்டோர் நலம்<br>சேப்பாக்கம்,<br>சென்னை– 600 005.<br>தொலைபேசி<br>அ) 28511124<br>நி ) 28552642 |
| 4 | <u>தேர்வுக் கட்டணம் வழங்குதல்</u><br>10ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களில் தமிழ் மொழி வழிக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பொதுத் தேர்வு எழுதுவோருக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது., தமிழ் மொழி வழி இல்லாத இதர பிரிவுகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் /சீர்மரபினர் மாணவர்களுக்கான தேர்வுக் கட்டணம் இத்துறையால் ஒவ்வொரு வருடத்தின் பிப்ரவரி/மார்ச் மாதங்களில் அரசு தேர்வு இயக்குநருக்கு வழங்கப்படுகிறது. | 1. பிவ, மிபிவ, சீ.ம இனத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்<br>2. பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ. 1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>3. மிபிவ /சீம வகுப்பினருக்கு வருமான வரம்பு ஏதும் இல்லை. | பிவ, மிபிவ, சீ.ம இனத்தை சார்ந்தவர் என்பதற்கான சாதிச் சான்று<br><br>வருமானச் சான்று . | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர் | ஆணையர்,<br>பிற்படுத்தப்பட்டோர் நலம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை– 600 005.<br>தொலைபேசி<br>அ) 28511124<br>நி ) 28552642 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத்தலைமை/ தொலைபேசி / நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 5 | **<u>அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில மொழி வழி பயிலும் மாணவர்களுக்கு படிப்புக் கட்டணம் ஈடுசெய்தல்</u>**<br>பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களில் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்கு மிகாமல், குடும்பத்தில் எவரும் பட்டதாரி இல்லையெனில், அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் ஆங்கில மொழி வழியில் பயிலும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு படிப்புக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. மிகப் பிற்படுத்தப்பட்டோர் /சீர்மரபினர் மாணவர்களுக்கு வருமான உச்சவரம்பு மற்றும் இதர தகுதிகளிலிருந்து படிப்புக் கட்டணம் பெறுவதில் விலக்களிக்கப் டுகிறது. | பிற்படுத்தப்பட்டோர், மாணவர்களின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்கு மிகாமலும், குடும்பத்தில் எவரும் பட்டதாரி இல்லை என்ற தகுதி பெற்றவர்களுக்கும், வருமானம் மற்றும் குடும்பத்தில் எவரும் பட்டதாரி இல்லை என்ற மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களும் இத்திட்டத்தின் கீழ் பயன் அடையலாம். | 1. பிவ, மிபிவ, சீ.ம இனத்தைச் சார்ந்தவர் என்பதற்கான சாதி சான்று<br>2. வருமானச் சான்று | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர் | ஆணையர்,<br>பிற்படுத்தப்பட்டோர் நலம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை– 600 005.<br>தொலைபேசி<br>அ) 28511124<br>நி ) 28552642 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத்தலைமை/ தொலைபேசி / நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 6 | <u>பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை</u><br>இத்திட்டத்தின் கீழ் கல்லூரி மற்றும்– பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு, எம்.பில்., பி.எச்டி, ஐடிஐ மற்றும் பாலிடெக்னிக் பட்டயப் படிப்பு, தொழில் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட படிப்பு கட்டணமும், சிறப்பு கட்டணமும் இத்திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு படிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, நடப்பாண்டிலுள்ள தேர்வுக் கட்டண தொகையும், உதவித் தொகை அறிவிக்கையிலுள்ள புத்தகத் தொகையும் ஒப்பளிக்கப்படுகிறது. தமிழ் மொழி வழி இல்லாத இதர பிரிவுகளில் பயிலும் +2 மாணவர்களுக்கான தேர்வுக் கட்டணத் தொகை ஒருங்கிணைந்த வகையில் இயக்ககங்களால் அரசு தேர்வுத் துறை இயக்குநருக்கு நேரடியாகச் செலுத்தப்படுகிறது. | 1. பிவ, மிபிவ, சீ.ம இனத்தை சார்ந்தவராக இருத்தல் வேண்டும்<br>2. பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ. 1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். | 1. பிவ, மிபிவ, சீ.ம இனத்தை சார்ந்தவர் என்பதற்கான சாதி சான்று<br>2. வருமானச் சான்று . | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர் | ஆணையர்,<br>பிற்படுத்தப்பட்டோர் நலம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை– 600 005.<br>தொலைபேசி<br>அ) 28511124<br>நி ) 28552642 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத்தலைமை/ தொலைபேசி / நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 7 | <u>பி.ஏ., பி.எஸ்.ஸி., பி.காம் போன்ற 3 வருட பட்டப் படிப்பிற்கான இலவசக்கல்வித் உதவித்தொகை திட்டம்.</u> நடப்பாண்டில் நிர்ணயிக்கப்படுகின்ற தொகையளவில் முழுத் தேர்வுக் கட்டணம், முழு சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்ப பெறாத இதர கட்டணமும் முழுமையாக ஈடு செய்யப்படுகிறது. உதவித் தொகை அறிவிக்கையில் வரையறுக்கப்பட்டுள்ள புத்தகத் தொகையும் வழங்கப்படுகிறது. முழுப்படிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. | பிற்படுத்தப்பட்டோர், மாணவர்களில் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/—க்கு மிகாமலும், குடும்பத்தில் எவரும் பட்டதாரி இல்லை என்ற தகுதி பெற்றவர்களுக்கும், வருமானம் மற்றும் குடும்பத்தில் எவரும் பட்டதாரி இல்லை என்ற தகுதி பெற்ற மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களும் இத்திட்டத்தின் கீழ் பயன் அடையலாம். | 1. பிவ, மிபிவ, சீ.ம இனத்தைச் சார்ந்தவர் என்பதற்கான சாதிச் சான்று<br>2. வருமானச் சான்று | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர் | ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலம், சேப்பாக்கம், சென்னை— 600 005. தொலைபேசி அ) 28511124 நி ) 28552642 |
| 8 | <u>தொழிற் கல்வி பட்டயப்படிப்பு பயிலுவோருக்கான இலவச கல்வி உதவித் தொகை</u><br>அரசு தொழில் நுட்ப பயிலகம் மற்றும் சிறப்பு தொழில் நுட்ப பயிலகத்தில் பயிலும் மாணவ மாணவியர்ளுக்கு சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் இதர திரும்பப் பெற்றிடாத கட்டணமும் முழுமையாக ஒப்பளிப்பு செய்து வழங்பப்படுகிறது.<br>2) அரசு உதவி பெறும் தொழில் நுட்ப பயிலகத்தில் பயிலும் மாணவ மணவிகளுக்கு சிறப்புக் கட்டணம் படிப்புக்கட்டணம் மற்றும் இதர திரும்பப் பெற்றிடாத கட்டணமும் முழுமையாக ஒப்பளிப்பு செய்து வழங்பப்படுகிறது. | பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களில் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/—க்கு மிகாது, குடும்பத்தில் எவரும் பட்டதாரி இல்லாதவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் அடையலாம். | 1. பிவ, மிபிவ, சீ.ம இனத்தைச் சார்ந்தவர் என்பதற்கான சாதி சான்று<br>2. வருமானச் சான்று | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர் | ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலம், சேப்பாக்கம், சென்னை— 600 005. தொலைபேசி அ) 28511124 நி ) 28552642 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத்தலைமை/ தொலைபேசி / நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 9 | **<u>தொழில் கல்வி (Professional course) பயிலுவோருக்கான இலவச கல்வி உதவித் தொகை திட்டம்</u>**<br>சிறப்புக் கட்டணம், படிப்புகட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் இதர திரும்பப் பெற்றிடாத கட்டணமும் முழுமையாக ஒப்பளிக்கப்படுகிறது. இவற்றினைத் தவிர, உதவித் தொகை அறிவிக்கையில் வரையறுக்கப்பட்டுள்ள புத்தகத் தொகையும் வழங்கப்படுகிறது. | பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்து மாணவர்களின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்கும் மிகாது, குடும்பத்தில் எவரும் பட்டதாரி இல்லாதவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் அடையலாம். | 1. பிவ, மிபிவ, சீ.ம இனத்தைச் சார்ந்தவர் என்பதற்கான சாதிச் சான்று<br>2. வருமானச் சான்று | மாவட்ட பிற்படுத்தப்போட்ார் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர் | ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலம், சேப்பாக்கம், சென்னை– 600 005. தொலைபேசி அ) 28511124 நி ) 28552642 |
| 10. | **<u>உண்டி உறையுள் கட்டணம்</u>**<br>அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகள் மற்றும் கல்லூரிகளில் இணையப் பெற்ற விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் மாதாந்திர உண்டி உறையுள் கட்டணங்கள் கல்வி உதவித் தொகையுடன் வழங்கப்படுகிறது. | 1. பிவ, மிபிவ (ம) சீ இனத்தை சார்ந்தவர்களாக இருக்கவேண்டும்.<br>2. பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.100,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் | 1. பிவ, மிபிவ, சீ.ம இனத்தைச் சார்ந்தவர் என்பதற்கான சாதி சான்று<br>2. வருமானச் சான்று | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர் | ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலம், சேப்பாக்கம், சென்னை– 600 005. தொலைபேசி அ) 28511124 நி ) 28552642 |
| 11. | **<u>இலவச மிதிவண்டிகள் வழங்குதல்</u>**<br>அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் மேல் நிலை (+1, +2) வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்-பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ/ மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கப் படுகிறது. | 1. இம்மாணவ /மாணவிகள் பிவ/மிபிவ/சீம இனத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>2. இச்சலுகை பெற பெற்றோர்/ பாதுகாவலரின் வருமான வரம்பு நிபந்தனை ஏதுமில்லை. | மிதிவண்டிகள் பெற தனியே விண்ணப்பிக்க வேண்டியதில்லை | சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள் மூலம் மிதிவண்டிகள் மாணவ/ மாணவிகளுக்கு வழங்கப்படும். | ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலம், சேப்பாக்கம், சென்னை– 600 005. தொலைபேசி அ) 28511124 நி ) 28552642 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத்தலைமை/ தொலைபேசி / நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 12 | <u>தையல் இயந்திரம் வழங்குதல்</u><br>ஏழை பி.வ, மி.பி.வ / சீ.ம இனத்தவர்களுக்கு தையல் இயந்திரம் இலவசமாக வழங்கப்படுகிறது | 1. பிவ, மிபிவ, சீ.ம இனத்தை சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>2) ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.16,000/—க்குள்ளும் மற்றும் நகர்புறங்களில் ரூ.24,000/—க்குள் இருத்தல் வேண்டும்.<br>3) துணி தைக்கத் தெரிந்திருக்க வேண்டும்.<br>4) வயது வரம்பு – 20—45 | 1. பிவ, மிபிவ, சீ.ம இனத்தைச் சார்ந்தவர் என்பதற்கான சாதிச் சான்று<br>2. வருமானச்சான்று | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலர் | ஆணையர்,<br>பிற்படுத்தப்பட்டோர் நலம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை— 600 005.<br>தொலைபேசி<br>அ) 28511124<br>நி ) 28552642 |
| 13 | <u>மாநில/ மாவட்ட அளவில் பரிசுகள் வழங்குதல்</u><br>மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் +2 மற்றும் 10 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் உயர்மதிப்பெண்கள் பெறும் பிவ இனத்தைச் சார்ந்த ஒரு மாணவர்/ ஒரு மாணவிக்கும் மிபிவ/சீம வகுப்பை சேர்ந்த மாணவர் ஒருவருக்கும் மாணவி ஒருவருக்கும் முதலாம், இரண்டாம், மற்றும் மூன்றாம் பரிசுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. | 1. பிவ, மிபிவ, சீ.ம இனத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்<br>2. வருமான வரம்பு கிடையாது. | பிவ, மிபிவ, சீ.ம இனத்தைச் சார்ந்தவர் என்பதற்கான சாதிச் சான்று | தனியே விண்ணப்பிக்க வேண்டியதில்லை | ஆணையர்,<br>பிற்படுத்தப்பட்டோர் நலம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை— 600 005.<br>தொலைபேசி<br>அ) 28511124<br>நி ) 28552642 |
| 14 | <u>சிறந்த மாணவர்களுக்கான பேரறிஞர் அண்ணா மற்றும் தந்தை பெரியார் நினைவு விருதுகள்</u><br>ஒவ்வொரு மாவட்டத்திலும் பிளஸ் 2 பொதுத் தேர்வில் முதல் இரண்டு நிலைகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று தொழிற் பட்டப்படிப்புகளில் சேர்ந்து பயிலும் பி.வ. இனத்தைச் சேர்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவியர்களுக்கும் மிபிவ/சீம இனத்தைச் சேர்ந்த 2 மாணவர்கள்/ 2 மாணவியர்களுக்கும் பேரறிஞர் அண்ணா நினைவு விருதுத் தொகை ஆண்டுக்கு ரூ.5000 வீதம் 4/5 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. | 1. பிவ, மிபிவ, சீ.ம இனத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்<br>2. வருமான வரம்பு கிடையாது. | 1) பிவ, மிபிவ, சீ.ம இனத்தை சார்ந்தவர் என்பதற்கான சாதிச் சான்று | தனியே விண்ணப்பிக்க வேண்டியதில்லை | ஆணையர்,<br>பிற்படுத்தப்பட்டோர் நலம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை— 600 005.<br>தொலைபேசி<br>அ) 28511124<br>நி ) 28552642 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத்தலைமை/ தொலைபேசி / நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| | அதே போன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழில்நுட்ப பயிலகத்தில் சேர்ந்துள்ள பிவ மாணவ/மாணவிகளில் 10–ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவியர்களுக்கும் மிபிவ/சீம வகுப்பைச் சார்ந்த 2 மாணவர்கள் 2 மாணவியர்களுக்கும் தந்தை பெரியார் நினைவு விருது தொகை ஆண்டுக்கு ரூ.5,000 வீதம் 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது | | | | |
| 15 | <u>தலைசிறந்த தனியார் பள்ளிகளில் +1 பயில நிதியுதவி அளிக்கும் திட்டம்</u><br>ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுப்பள்ளிகளில் பயின்று மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பு பொது தேர்வு அதிக மதிப்பெண் பெற்ற 10 மாணவ / மாணவியரை ( 3 பிவ மாணவர்/ 3 பிவ மாணவியர் 2 மிபிவ/சீம மாணவர்/ 2 மிபிவ/சீம மாணவியர் ) தமிழகத்தின் தலை சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்ந்து மேல்நிலைக் கல்வி பயில நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டொன்றிற்கு உயர்ந்த பட்சமாக ரூ.28,000/– வீதம் 2 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. | 1) பிவ/மிபிவ/சீம வகுப்பை சார்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.<br>2) 10–அம் வகுப்பு அரசு பள்ளியில் பயின்று இருக்க வேண்டும்.‘<br>3) ஆண்டு வருமானம் ரூ.1,00,.000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். | 1) பிவ, மிபிவ, சீ.ம இனத்தை சார்ந்தவர் என்பதற்கான சாதிச் சான்று<br>2) வருமானச் சான்று | தனியே விண்ணப்பிக்க வேண்டியதில்லை | ஆணையர்,<br>பிற்படுத்தப்பட்டோர் நலம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை– 600 005.<br>தொலைபேசி<br>அ) 28511124<br>நி ) 28552642 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத்தலைமை/ தொலைபேசி / நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 16 | <u>வேலை வாய்ப்புப் பயிற்சித்திட்டங்கள்</u><br>இத்துறையின் மூலம் பல்வேறு வகையான வேலை வாய்ப்பினைச் சார்ந்த பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.<br>1. கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி<br>2. கனிணி சம்பந்தப்பட்ட பயிற்சிகள்<br>3. தோல் பொருள் தயாரிப்பு பயிற்சிகள்<br>4. பிளாஸ்டிக் தொழில் நுட்பம் சார்ந்த பயிற்சிகள்<br>5. ஆடை தயாரிப்பு பயிற்சிகள்<br>6. அழகுக்கலை பயிற்சி<br>7. உணவு தயாரிப்பு மற்றும் உணவக நிர்வாக பயிற்சி<br>8. அழைப்பு மைய பயிற்சி<br>9. தோட்டக்கலை நர்சரி மேலாண்மை பயிற்சி<br>10. உதவி செவிலியர் பயிற்சி மற்றும் இதர வேலைவாய்ப்பினைச் சார்ந்த பயிற்சிகள் | 1) 10–ஆம் வகுப்பு/ 12–ஆம் வகுப்பு/ ஐ..டி.ஐ/ பட்டப்படிப்பு/ டிப்ளமோ இன் மெக்கானிக்கல் இன்ஜினியரிங்/ டர்னர்/பிட்டர் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>2) தமிழ்நாட்டைச் சேர்ந்த பிவ/மிபிவ/சீம வகுப்பினரை சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>3) குடும்ப வருமானம் ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். | 1. கல்வித் தகுதி சான்றிதழ்<br>2. சாதி சான்றிதழ்<br>3. வருமானச் சான்றிதழ் (வருவாய்த்துறையில் பணிபுரியும் துணை வட்டாட்சியர் அந்தஸ்திற்கு குறையாத தகுதி பெற்ற வருமானச்சான்று அலுவலரால் வழங்கப்படல் வேண்டும்) | தனி அலுவலர் (திட்டம்) | ஆணையர்,<br>பிற்படுத்தப்பட்டோர் நலம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை– 600 005.<br>தொலைபேசி<br>அ) 28511124<br>நி ) 28552642 |